# வள்ளுவம் கண்ட அரசியல்

2

**சு.காவியா**

**முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு, தமிழாய்வுத்துறை**

**புனித சிலுவை தன்னாட்சி கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி-2**

Kaviya20ua@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

நாட்டின் தன்மை ஆட்சியின் இயல்பு ஆகியவற்றின் நிலைகளை எடுத்துக் கூறுவதை அரசியல் எனலாம் . இது ஒரு சமூகத்தில் வாழும் மக்களின் செயல்களின் நிலையை எடுத்துக்காட்டும் . மனிதனின் எண்ணங்களும் கற்பனைகளும் பிறரால் கட்டுப்படுத்த முடியாதவை . உலகம் ஒரு குடும்பம் , மக்கள் அதன் உறுப்பினர் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வேறல்லர்.குடியரசு, முடியரசு, படையரசு என சிறப்பான முறையில் அரசு நடத்துவதை நோக்கமாய் கொள்ள வேண்டும் . வள்ளுவரின் அரசியல் எப்படிப்பட்டது என்பதை அறிவதே "வள்ளுவம் கண்ட அரசியல் " என்னும் பொருளில் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றன.

**முன்னுரை:**

வள்ளுவர் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழகத்தில் வாழ்ந்த ஒரு தனிப்பெரும் புலவர் . வள்ளுவர் வையகம் தழைத்து வாழ அறநூலாம் திருக்குறளை எழுதியுள்ளார் . வள்ளுவரின் திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகின்றது. எக்காலத்தும், எந்நாட்டவராலும், எச்சமயத்தினராலும், பின்பற்றக்கூடிய கருத்துக்கள் அதில் இடம்பெற்றுள்ளன . வள்ளுவர் வாழ்வின் பல்வேறு கூறுகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து உலக உயிர்களின் செம்மையான வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுரைகளை விளக்கி உள்ளார் .அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளில் வாழ்க்கை பொலிவடையும் வழிவகைகளை வகுத்துள்ளார் . இவர் 25 அதிகாரங்களிலும், ஒழிபியல், அங்கவியல், போன்ற அதிகாரங்களிலும் அரசியல்

கருத்துக்களை உள்ளடக்கி உள்ளார் . நாட்டிற்கு ஓர் அரசு வேண்டும் . அரசுக்கோர் தலைவன் வேண்டும் என்பது வள்ளுவம் , தலைவன் வரும் வலி பற்றி கவலை இல்லை . அரசன் தவறும் வழி பேசாது இறைமாட்சி அதிகாரத்து அவனுக்கு அமைய வேண்டும் . அரசியல்புகளைப் பேசினார் என்பர் வ.சு.ப.மாணிக்கம்.

**அரசியல் பொருண்மை:**

அரசியல் என்பதற்கு நாடு ஒன்றினை ஆட்சி புரிந்திடும் முறை ஆட்சி புரிவது பற்றிய பல்வேறு நடைமுறைகள் எனவும் அரசாங்கம் என்பதற்கு நாடு ஒன்றினை நிர்வகிப்பதற்காக அதற்கென்று அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட ஒரு அமைப்பு எனவும் அரசியல் சட்டம் என்பதற்கு அரசாங்கத்தின் அதிகாரம் கடமைகள் ஆகியவற்றோடு குடிமக்களுடைய உரிமைகள் போன்றவற்றையும் வரையறை செய்யும் அடிப்படைச் சட்டம் எனவும் நர்மதாவின் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது . அரசு என்ற சொல்லுக்கு ‘அரசன்’ இராச்சியம்,அரசாட்சி, என்ற பொருள்கள் (தமிழ்-தமிழ்அகரமுதலி) வழங்கப்படுகின்றன. அரசன் என்பது தலைமையையும் இராச்சியம் என்பது ஆளப்படும் பகுதி என்ற இடத்தை ( நிலத்தை)மும் அரசாட்சி என்பது அரசு நிர்வாகம் என்ற (தலைமையின்) கருவியையும் குறிப்பன .(பக்.33)என் பேராசிரியர் இராஜமுத்திருளாண்டி குறிப்பிடுகிறார்.

“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு”(குறள்)

**பொருள்:**

பசியும் பிணியும் இன்றி வளம் செழிக்கும் வகையில் நாடு இருக்க வேண்டும் . என்பது வள்ளுவர் பெருந்தகையின் கணிப்பு.

மக்கள் நல அரசுக்கான வள்ளுவரின் முன்னெச்சரிக்கைகள்:

“ நாள்தோறும் நாடி முறை செய்ய மன்னவன் நாள்தோறும் நாடு கெடும்”(குறள்)

“இம்மையின் இன்னாது உடைமை முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப் படகின்”(குறள்)

“முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்”(குறள்)

“ஆ பயன்குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் கவான் எனின்”(குறள்)

பொருள்:

அதாவது நாள்தோறும் தன் ஆட்சியின் நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து முறை

செய்யவில்லை அதனால் அவன் நாட்டை இழக்க நேரிடும் என்றும்: மழை பெய்யாத அரசனுடைய ஆட்சியில் வாழ்வது மிக துன்பமானது என்றும்; அந்த நாட்டின் பருவ மழை தவறும் என்றும் பசுக்கள் கூட பால் கரவாமல் போகும் என்றும்; அந்தணர்கள் அறநூல்கள் அனைத்தையும் மறப்பார்கள் என்றும் வள்ளுவர் அரசுக்கு மிகப்பெரிய எச்சரிக்கையை விடுகின்றார். வள்ளுவர் அரசன் ஆட்சி செய்த செங்கோல் ஆட்சியினையே இறைமைத் தன்மை உடையதாக் கருதினார். இதனை பின்வரும் குரல் புலப்படுத்தும்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நிற்பது மன்னவன் கோல் (குறள்543)

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல்நோக்கி வாழும் குடி (குறள்542)

**பொருள்:**

எனும் குறளும்ண,செங்கோன்மை என்னும் அதிகாரத்தில் உள்ள பிற குறள்களும் இக்கருத்திற்கு வலுச்சேர்பனவாக உள்ளன .சுருங்கக் கூறின் திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பை மக்கள் நல அரசு என்பது பொருத்தமாக இருக்கும் . பண்டைக்காலத்தில் முடியாட்சியைத் தவிர வேறு அமைப்புகள் இல்லை . எனினும் முடியாட்சியில் மக்களாட்சியையும் , குடியாட்சியில் கொடுங்கோலாட்சியையும் காணமுடடிகிறது. ஆட்சி எந்த உருவத்தில் காணப்பட்டாலும் , அதன் நோக்கம் பயன் ஆகியவை கருதித்தான் உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ, கொள்ளப்பட வேண்டும். திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "மக்கள் நல அரசுக்கு " வித்திட்டு விட்டார் எனில் அது மிகையாகாது.

**அரசனுக்கான அரசநீதி:**

"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு"

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந் நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு"

*தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவர்க்கு*

பொருள்:

அதாவது படை , குடிமக்கள், உணவு பொருட்கள் , நல்ல அமைச்சர்கள் , சிறந்த நண்பர்கள், அரண் என்னும் ஆறு உறுப்புகளையும் ; அச்சமின்மை,ஈகை, அறிவு, ஊக்கம், காலம், தாழ்த்தாமல், கல்வி துணிவுடமை, முதலிய பண்பு நலன்களையும் உடையவன்

தான் பெருமை பெற்ற அரசனாக இருக்க முடியும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார் . அரசு நீதி நிர்வாகத்திற்கு மேல் குறிப்பிட்ட அனைத்தும் அடிப்படையானது என முதற்பாவலர் வலியுறுத்துகிறார்.

**முடிவுரை:**

மன்னன்-தலைவன் மன்னனுக்கு கல்வி வேண்டும் . மக்கள் தொடர்பியல் சொல்லாற்றலும் பேச்சு வன்மையும் உடையவனாக இருக்க வேண்டும் . மன்னன் கடவுள் இல்லை, பொருட்பாலில் வள்ளுவம் கூறும் அரசியல் , நாடு என்னும் நிலப்பரப்பு , அரசியலின் கொள்கைகளும் போக்குகளும் , மன்னனின் பண்புகளும் பணிகளும் , அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்தல் , அரசின் நிர்வாகக் கொள்கை, வள்ளுவ அரசியலின்தனித்தன்மைகள், வள்ளுவம் கண்ட நாடு , கோனாட்சியில் குடியாட்சி கண்ட வள்ளுவம், மன்னனின் பாதுகாவலர்கள் , கவசங்கள்,தூதரும் தூதுவர் செயலும் , என்னும் பகுப்பு நிலைகளில் வள்ளுவம் வலியுறுத்தும் அரசியல் சிந்தனைகள் இவ் ஆய்வுக் கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளன .அறம்தழுவிய அரசியல் என்ற வள்ளுவக் கொள்கையில் அறத்துப்பாலிலும் , பொருட்பாலிலும் காணப்பெறும் அரசியல் சிந்தனைகள் மக்கள் நலவாழ்வு என்னும் நோக்கு நிலையில் எக்காலத்துக்கும் ஏற்புடையதாகும்.

**துணை நூற்பட்டியல் :**

1.திருக்குறள்-பரிமேலழகர் உரை

2. திருக்குறள் ஒரு சமூக பார்வை-தி.வெ.ரா

3. திருக்குறள் நயம்-குரலாய்வு செம்மல் ஆ.வே.இராமசாமி

4.திருக்குறள் வழங்கும் பத்து உடைமைகள்-புலவர் வ.ஞானபிரகாசம்

5. திருக்குறள் நயவுரை-“திருக்குறள் நம்பி”தங்க.பழமலை